4. கவன ஈர்ப்புகள்.

அ. சென்னை சைதை மசூதித் தெருவில் தீ விபத்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "19—4—1981 அன்று சென்னை சைதாப்பேட்டை மசூதித் தெருவில் ஏற்பட்ட தீ விபத்தினால் குடிசைகள் சேதமடைந்தது குறித்து" அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தேதியில் குடிசை தீப்பற்றி எரிந்ததில் உயிர்ச் சேதம், கால்நடை சேதம் எதுவும் இல்லை. 5,000 ரூபாய் வரையில் சேதமாகி இருக்கிறது. பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு ரூ. 200 கொடுக்கப்பட்டு இருக்கிறது. அரிசியும், வேஷ்டியும், புடவையும் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 10—30]

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே, எரிந்து போன குடிசைகளுக்குப் பதிலாக புதிதாக வீடு கட்டிக் கொள்ள 2,000 ரூபாய் கடன் கொடுக்கப்படுகிறது. அப்படி புதிதாக வீடுகள் கட்டிக்கொள்ள கடன் கேட்டு அவர்கள் அரசுக்கு மனு அனுப்பியிருக்கிறார்களா? அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, அந்த இடத்திலிருந்து மனுக்கள் வரவில்லை. மனு வந்தால் அதை கவனிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஆ. நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்ட கடன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்படாதது பற்றி திருவாளர்கள் சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.